

# இயேசுவுடன்



# பயணம்

## சிலுவைப் பாதை

### கிருபாவளன்



## சமூகமாய்...

# ஆண்டவர் அழைக்கிறார்.

## அவனியை மாற்ற...

இயேசுவின் திருப்பாடுகளின் பாதையில் பங்கெடுக்க வந்துள்ள இறைச் சமூகமே! இயேசுவைப் பாடுகளுக்கும், சாவுக்கும் உட்படுத்த எத்தணித்துக் கொண்டிருந்த யூத குருக்களின் தலைமைக் குருவாகிய கைப்பாஸ் சொன்ன நியாயம் என்ன தெரியுமா? 'மக்களுக்காக ஒருவன் மட்டுமே இறப்பது நலம்' (அருள் 18:14)

ஆம். கிறிஸ்துவின் மரணம் ஒரு தனி நபருக்காகவோ, ஒரு தனி இனத்துக்காகவோ, ஒரு தனி நாட்டுக்காகவோ நிகழ்ந்த மரணம் அல்ல. மாறாக அது மக்கள் அனைவருக்காக, மனித சமூகத்துக்காக நிகழ்ந்த மரணம். உலகின் பாவங்களைப் போக்க வந்த இறைவனின் செம்மறியான இயேசுவின் பாடுகளில், மரணத்தில், பலியில் மனித சமூகத்திற்கே பங்குண்டு. அந்தச் சமூகத்தில் நீங்களும் நானும் அடக்கம். நாம் அனைவரும் தனி நபர்கள்தான் என்ற போதிலும் கிராமம், ஊர், நகரம், மாவட்டம், மாநிலம், நாடு, உலகம் என பல நிலைகளில் சமூகத்தின் அங்கத்தினர்களே. இந்தச் சமூகத்தின் அங்கத்தினர்களாய் இருக்கும் நமக்கு உரிமைகள் உண்டு. கடமைகளும் உண்டு. 'செசாருக்குரியதை செசாருக்குச் செலுத்த வேண்டிய அவசியம்' அனைவருக்கும் உண்டு. அந்தக் கடமைகளைச் செய்யத் தவறுகிறபோது சமூகம் நலிவுறுகிறது.

நலிவுற்ற சமூகத்தில் இயேசுவின் பாடுகள் மறுபிரசன்னம் ஆகிறது. அவற்றில் உங்களுக்கும் எனக்கும் பங்குண்டு. இந்தச் சிலுவைப் பாதையின் போது சமூகக் கண்ணோட்டம் நம்மை வழிநடத்தட்டும். ஒரு சமூகமாக இயேசுவின் பாடுகளைத் தியானிப்போம். பின் செல்வோம்.

# மௌனத்தால் மாற்றங்கள் நிகழ்வதில்லை

## நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்

(மத் 5:6 )

**முதல் நிலை :**

நீதிமானாகிய இயேசு குற்றவாளியாக்கப் படுகிறார். நிரபராதியான இயேசு தண்டிக்கப்படுகிறார். கை கழுவுகிறது அதிகார வர்க்கம். மௌனம் சாதிக்கிறது மக்கள் மந்தை . தவறான தேர்வு நடந்து முடிகிறது. பரபாஸ் விடுவிக்கப்படுகிறான். இயேசு தண்டிக்கப்படுகிறார்.

'நாடு கெட்டுவிட்டது. அரசியல் மோசமாகி விட்டது' என்று அரசியல் வாதிகள் மீதும் சமுதாயத்தின் மீதும் பழிபோட்டுவிட்டு வாளாவிருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? நாட்டில் நிலவும் அவல நிலைக்கு நாமும் ஒரு வகையில் காரணம் தான். அரசியல்வாதிகள் தாமாக முளைப்பதில்லை. அவர்களைத் தேர்வு செய்வது நாம்தானே?

தவறான ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நாம் செலுத்தத் தவறிய வாக்கு காரணம். தவறான பொருளாதார சமூக கொள்கைகளுக்கு நாம் எழுப்பத் தவறிய எதிர்ப்பு காரணம்.

நல்லவர்கள் தலைமைப் பொறுப்பை எட்ட முடியாததற்கு நாம் அளிக்கத் தவறிய ஆதரவு காரணம். தீயவர்கள் தங்கள் தீமையில் தொடர்வதற்கு நாம் கொடுக்கத் தவறிய குரல் காரணம்.

அரசியல் ஒரு சாக்கடை என அறிவு ஜீவிகள் அர்த்தம் கூறிவிட்டு அக்கறையே இல்லாமல் இருப்பதால்தான், அது ஒரு சாக்கடையாகவே இருக்கிறது. சாக்கடையில் இறங்கி சுத்தம் செய்யவும் துணிவில்லை சாக்கடையில் விழுகின்ற பாமர வாக்காளர்களுக்கு விழிப்ணர்வு தரவும் மனமில்லை. இப்படி இருந்துவிட்டு சலித்துக் கொள்வதில் என்ன பயன்?

சமூகத்தில் எது நடந்தாலும் அது நம்மை பாதிக்காதது போல மௌனம் சாதித்து விட்டு பின் சமூகத்தைக் குறை கூறுவது எவ்வகையில் நியாயம்? நடக்கும் தவறுகளைக் கண்டு மௌனம் சாதிப்பதும் ஒரு வகையில் அவற்றை ஆமோதிப்பது போலத்தான். |

பிலாத்தின் தீர்ப்புக்கு எதிராக மக்கள் கிளர்ந்திருந்தால், மதகுருக்களுக்கு எதிராக யூதர்கள் திரண்டிருந்தால் இயேசு தான் வேண்டும் பரபாஸ் வேண்டாம்' எனக் குரல் கொடுத்திருந்தால் ஒரு வேளை இயேசுவின் மரணம் தவிர்க்கப்பட்டிருக்கும்.

(நீங்களும் நானும் நன்மைக்கு ஆதரவாக, தீமைக்கு எதிராக குரல் கொடுக்கத் துணிந்தால், அரசியலும் சமூகமும் மாறக்கூடும். **நினைவில் கொள்வோம்.** மௌனத்தால் மாற்றங்கள் நிகழ்வதில்லை.

**செபம்** : *இறைவா! மௌனத்தால் மாற்றங்கள் நிகழ்வதில்லை என்பதைப் புரிந்துக் கொண்டு, எனது சமூகக் கடமைகளைச் சரியான நேரத்தில் சரியான விதத்தில் செய்ய அருள்தாரும். ஆமென்.*

# 2. இரங்குவோம். சுமைகளை இறக்குவோம்

## "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்... இரக்கம் பெறுவர் "

(மத் 5:7)

**இரண்டாம் நிலை : -**

கள்வர்களும் கயவர்களும் சுமக்க வேண்டிய சிலுவை, இயேசுவின் தோள்கள் மீது சுமத்தப்படுகிறது. சுமக்க வேண்டிய தோள்களா அவை! பல்லக்கில் சுமக்கப்படவேண்டியவர் ஆயிற்றே அவர்! ஆயினும் காரணமின்றி அவர் மீது சிலுவை சுமத்தப்படுகிறது. அவரும் சுமக்கிறார்.

இன்றைக்கும் காரணமே இல்லாமல் சிலுவை சுமப்பவர்கள் உண்டு. தோள்களில் சுமக்கப்படவேண்டிய குழந்தைகளின் தோள் மீது சுமைகள் ஏற்றப்படுகின்றன. புத்தகச் சுமைகளுக்குப் பதிலாக கூலிச்சுமைகளை சுமக்க நேரிடுகிறது.

படிக்க வேண்டிய வயதில் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு செல்லும் குழந்தைத் தொழிலாளர்களைப் பார்த்ததுண்டா? அறிவொளி பெற்று தீபமாக சுடர்விடவேண்டிய குழந்தைகள் தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீய்ந்து போகின்றனரே! கவனித்ததுண்டா?

இவற்றைப் பார்க்கும் நாம் இவர்களுக்காய் என்ன செய்திருக்கிறோம்? நாம் என்ன செய்ய முடியும்? இவையெல்லாம் பெரிய சமூக சேவகர்கள் கவனிக்க வேண்டியவை, செய்யவேண்டியவை என நினைக்கலாம். குறைந்த பட்சம் நம் வீட்டில் நிகழ்வதையாவது பார்த்திருக்கிறோமா? வீட்டுவேலை செய்யும் அந்தப் பெண்ணின் மகனோ, மகளோ படிக்கிறார்களா, படிக்க வைக்கப்படுகிறார்களா என்பதை அறிவோமா? சில நேரங்களில் அத்தகு குழந்தைகளை நாமே வீட்டு வேலைக்கும் அமர்த்துகிறோமே! கொடுமையல்லவா அது? “இதில் என்ன தவறு? படிக்க முடியாத அவர்களின் பசியைப் போக்க வேலை கொடுக்கிறோம். பலன் எங்களுக்கு மட்டுமன்று அவர்களுக்கும் தான் எனப் பட்டென்று பதில் தருகிறது உள்ளம். வறுமை என்னும் வலைக்குள் சிக்கியிருக்கும் அவர்களது நிலையைப் பயன்படுத்தி அவர்கள் உழைப்பை விலை பேசுவதற்கு வசதியாக இந்த வாதம் இருக்கலாம், ஆனால் இளமையில் கல்' என்ற முதுமொழி இந்தக் குழுந்தைகளுக்கு மறுக்கப்படுவதற்கு நாமும் ஒரு காரணம். படிக்க விரும்பியும், வறுமையால் முடியாதவர்களை நாம் இனம் கண்டு உதவும் வரை இந்த குற்றத்தில் நமக்கும் பங்குண்டு.

**நினைவில் கொள்வோம்**. சுமைகளைச் சுமத்துபவர் மட்டுமல்ல, அவற்றை இறக்கத் தவறுபவர்களும் குற்றவாளிகளே. சுமைகளைச் சுமப்பவர்களுக்காய் இரங்குவோம். இரங்குவதோடு, அவர்கள் சுமையை இறக்கவும் முயல்வோம்.

**செபம்** : இறைவா! சுமைகளைச் சுமத்துபவர்கள் மட்டுமல் அவற்றை இறக்கத் தவறுபவர்களும் குற்றவாளிகளே என்பதைப் புரிந்து, கொண்டு பிறரது சுமைகளை இறக்கும் இரக்க குணத்தைத் தாரும் ஆமென்.

## 3.வித்திட்டோர் மட்டுமல்ல உரமூட்டுபவரும் விஷமிகளே

### "ஆண்டவரை அறிவோர் அநீதியை விட்டுவிட வேண்டும்"

(2 திமோ 2:19)

**மூன்றாம் நிலை** :

உலகையே தாங்குகின்ற உன்னதக் கடவுள் தன் சிலுவையை தாங்க முடியாமல் தரையில் விழுகிறார். சிலுவையின் பாரம் பரமனையே தடுமாற வைத்து விட்டது. வீழ்ந்து கிடப்பது இயேசுவா? இல்லையில்லை. விழத்தாட்டியவர்களின் மனிதம்தான் வீழ்ந்து கிடக்கிறது. கிடக்கிறது.

இன்றைக்கு சமுதாயத்தில் ஒரு சிலர் வீழ்ந்தவர்களாய் வாழத்தானே செய்கிறார்கள். இன அடிப்படையில் தாழ்ந்தவர்கள் எனத் தரம் பிரிக்கப்பட்டு தாக்குதலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கத்தான் படுகிறார்கள். சுயமரியாதை, மனித கவுரவம் என்பது அவர்களுக்கு மறுக்கப் படத்தான் செய்கிறது. அப்போதெல்லாம் வீழ்ந்து கிடப்பது தனி மனிதன் அல்ல! மனிதம் என்பதை எப்போது உணரப்போகிறோம்?

இவையெல்லாம் காலகாலமாக நிலவிவருபவை. நம் கலாச்சாரத்தோடு ஒட்டிப் பிறந்தவை. இவற்றைக் களைய நம்மால் முடியாது எனக் கூறி தப்பித்துக் கொள்வது நேர்மையின்மை.

இனத்தின் பெயரால், சாதியின் பெயரால், குலத்தின் பெயரால் எற்படுத்தப்பட்டுள்ள பாகுபாட்டிற்கு நாம் நேரடி பொறுப்பாளர்களாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவை தொடர்வதற்கு நாமும் ஒரு வகையில் பொறுப்பாளிகள்தான். இந்தக் கொடுமைகளுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களில் நாம் நம்மையே இணைத்துக்கொள்ள தயங்குகிறோம். தவறுகிறோம். நம் தனிப்பட்ட வாழ்வில் கூட நமக்கோ என் பிள்ளைகளுக்கோ வரன் தேடும் போது சமூக, சாதிய, பொருளாதார வரையரைகளை நாம் வகுத்துக் கொள்வதில்லையா? பணி செய்யும் இடத்தில், பங்குத்தளத்தில், பழகும் சுற்றத்தில், அவர்களைச் சமமாய்க் கருதி, நட்புடன் பழகுவதற்குப் பதிலாக, அவர்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்வதில்லையா? அப்போதெல்லாம் சமூகப் பாகுபாட்டை நாமே ஊக்குவிக்கிறோம் என்பது தான் பொருள்.

மனிதச் சமுதாயம் மனுவுருவாகிய இறைவனையே கீழே தள்ளி வேடிக்கைப் பார்த்தது. அவரது சாயல்களான மனிதர்களில் ஒரு சிலரை கீழே தள்ளி வேடிக்கைப் பார்ப்பதில் என்ன விந்தை இருக்கிறது?

**நினைவில் கொள்வோம்**. சமூக ஏற்றத்தாழ்வு என்ற விஷச்செடிக்கு வித்திட்டவர்கள் மட்டுமல்ல, உரமூட்டி வளர்ப்பவர்கள் விஷமிகள்தான்.

**செபம்** : இறைவா! சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்க்கின்ற மனத்துணிவும் அதனால் வீழ்ந்து கிடப்போரை தூக்கிவிடும் நல்ல உள்ளத்தையும் தந்தருளும். ஆமென்.

## 4.நம்ப முடியாத சில நிஜங்கள்

### தளர்ந்தோர்க்கு ஊக்கமூட்டுங்கள் வலுவற்றோருக்கு உதவுங்கள்'

(1 தெச 5:3)

**நான்காம் நிலை:**

கல்வாரிப் பாதையில் ஒரு கோரமான சந்திப்பு நிகழ்கிறது. ஆசையாய் வளர்த்த மகனை அன்புத்தாய் சந்திக்கிறார்கள். ஆனந்தம் அல்ல, ஆதங்கத்தோடு. எப்படி அழைத்துச் செல்லப்பட வேண்டியவரை இப்படி இழுத்துச் செல்கிறார்கள் என அன்னையின் உள்ளம் குமுறி நம்ப முடியாத சூழலில் அந்தச் சந்திப்பு நடக்கிறது.

வாழ்க்கைப் பாதையில் நம்பமுடியாத சில சந்திப்பு நிகழத்தான் செய்கின்றன. வாழ்க்கையின் முற்பகுதியில் நாம் சந்தித்த சிலரை வாழ்க்கையின் பிற்பகுதியில் சந்திக்க முடிகிறது. எட்ட உயரத்தில் இருப்பார்கள் என்று எண்ணியவர்களை, நெருங்க முடியாதப் பள்ளத்தில் பார்க்க நேரிடுகிறது. எல்லாத் தகுதிகளும் இருந்த போதிலும் தகுதியற்ற நிலையில் சிலர் இருப்பதைக் காண முடிகிறது. நம்ப முடிவதில்லை . ஆனால் அதுதான் நிஜம். பள்ளிப்பருவத்தில் பிரகாசித்த ஒரு சிலர் போதிய வசதியின்மை, போதிய செல்வாக்கின்மை, போதிய அறிமுகமின்மை போன்ற காரணங்களால் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் இருந்து விடுகிறார்கள்.

முளையிலேயே தெரிந்த சில விளையும் பயிர்கள் வளரவே முடியாமல் நசுக்கப்படுகின்றன. சிலர் கிள்ளி எறியப்படுகின்றனர். கல்விக் கூடங்களிலும், பணியிடங்களிலும் இட ஒதுக்கீட்டு முறை இவர்களுக்கு உரிய இடத்தை அபகரித்து விடுகிறது. தகுதி படைத்த இவர்களுக்கு இடம் மறுக்கப்படுகிறது. விளைவு கனவுகள் கலைந்தவர்களாக வாழ்க்கையின் விளிம்பில் விழிபிதுங்கியிருக்கிறார்கள்.

இட ஒதுக்கீடு பின் தங்கியவர்களுக்கு இன்றியமையாததுதான். மறுப்பதற்கில்லை. ஆனால் இன ரீதியாக மட்டுமே முற்படுத்தப் பட்டவர்களாகவும், மற்றெல்லாவிதத்திலும் பின்தங்கியிருப்போரின் கதி என்ன? மதம் மாறிய ஒரே காரணத்துக்காக ஒதுக்கீடும் உரிமையும் மறுக்கப்படும் சிறுபான்மையினரின் நிலை என்ன?

அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத சில அணுகுமுறையால் நிகழும் இந்த விபரீதத்திற்கு நாம் என்ன செய்ய முடியும் என்ற கூற்றில் உண்மை இருக்கலாம். ஆனால் நம்முடைய அறிமுகம், நம்முடைய பரிந்துரை, தம்முடைய பொருளுதவி, எல்லோரையும் இல்லையென்றாலும் ஒரு பலரையாவது கரை சேர்த்திருக்கும். செய்தோமா? இல்லையே!

**நினைவில் கொள்வோம்.** சோகமான சந்திப்புக்களுக்கு காரணமானவர்கள் மட்டுமல்ல, கண்டும் காணாது போகிறவர்களும் பொறுப்பாளிகள் தான்.

**செபம்** : இறைவா! தகுதி படைத்தோருக்குச் சரியான தடம் அமைத்துத் தந்து அவர்களை உயர்த்தி விடும் தாராள மனம் தாரும். ஆமென்.

# 5.காரணங்கள் கூறி கருணையை மறுக்கலாமா?

## ''எல்லாருக்கும் எப்போதும் நன்மை செய்யவே நாடுங்கள்''

(1 தெச 5:15)

**ஐந்தாம் நிலை :**

இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் வற்புறுத்தப்படுகிறார் சீமோனின் மனதில் அடுத்தடுத்து கேள்விகள். இவர் நீதிமானா குற்றவாளியா? குற்றவாளியானால் அவரது தண்டனையில் நான் ஏன் பங்கேற்க வேண்டும்? ஒரு வேளை நல்லவராய் இருப்பாரோ! எது எப்படியோ? நாம் செய்யப்போவது உதவி. உதவி செய்வது நல்லது தானே! அவர் நல்லவரா, தீயவரா என்ற கவலை எனக்கெதற்கு என்று எண்ணியிருக்கக் கூடும். மனப்போராட்டம் முடிகிறது. மனமுவந்து உதவுகிறான் சீமோன்.

வாழ்க்கையின் வழியோரங்களில் நமக்கும் இந்த நிலை ஏற்படத்தான் செய்கிறது. அது சாலையோர பிச்சைக்காரனாய் இருக்கட்டும். அல்லது சான்றுகளோடு வரும் தொண்டு நிறுவனங்களாக இருக்கட்டும். நம்மிடம் உதவி கேட்டுவரும் அவர்களைப் பற்றி அடுத்தடுத்து கேள்விகள் எழுந்துவிடும். ஒரு விவாத மேடையே அரங்கேறி விடும். உண்மையிலேயே இவர் ஏழையா? ஊனமுற்றவரா தேவையோடு இருப்பவரா அல்லது ஏமாற்றுகிறாரா? இவருக்கு அல்லது இந்த நிறுவனத்துக்குச் செய்யும் உதவி உண்மையிலேயே போய சேரவேண்டியவர்களைச் சென்று சேருமா? அல்லது இவர்களே விழுங்க விடுவார்களா? இது போன்ற பல கேள்விகள் நமக்குள் எழும். இவற்றில் சில நியாயமானவையும் கூட. ஆனால் குதர்க்கமான சில பேர் கேள்விகள் எழுப்புவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். சிறு உதவி கூட, செய்ய மனமோ அல்லது நல்லெண்ணமோ இல்லாத இவர்கள் தங்க சுயநலத்தை மூடிமறைக்க இத்தகைய கேள்விகளைப் பயன்படுத்தி கொள்கின்றனர். நாம் செய்யும் உதவி சரியான இடத்திற்கு போய் சேரவில்லையென்றாலும் நாம் ஏமாற்றப்பட்டிருந்தாலும் கூட நம்மைப் பொறுத்தமட்டில் நாம் பகிர்ந்து

கொள்ள ஆசைப்பட்டோம் என்பது ஒரு - நற்செயல்தானே! தவறு செய்பவர்கள் தங்கள் தவற்றுக்குக் கணக்குக் கொடுக்கட்டும்.

ஆனால் ஒரு வேளை அவசரத் தேவையோடு ஒருவர் நம்மை அணுகி, நாம் குதர்க்கமான கேள்விகள் எழுப்பி, அவருக்கு உதவ மறுத்து, அதனால் தீராத பேரிழப்பு ஏற்பட்டால் அவர் துயருக்கு நாம் காரணமாக மாட்டோமா?

**நினைவில் கொள்வோம்:-**. உதவி செய்யாமல் இருப்பதற்கு காரணம் தேடுவதைக் காட்டிலும் உதவி செய்வதற்கு காரணம் தேடுவதே கருணையின் அடையாளம்

**செபம்** : இறைவா! உதவி செய்யாமல் இருப்பதற்குக் காரணம் தேடுவதை நிறுத்திவிட்டு, உதவி செய்வதற்குக் காரணம் தேடவும், உதவி தேவைப்படுவோரைத் தேடவும் கருணை உள்ளம் தாரும். ஆமென்.

## 6.நல்லெண்ணம் மட்டுமல்ல துணிவும் தேவை

**" நற்செயல்களைச் செய்வதில் முன்மாதிரியாய் இருங்கள்''**

(தீத்து 2 :7)

***ஆறாம் நிலை :***

இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார். பொலிவிழந்த அந்த முகத்தைப் பார்த்த பின்னும் அவரால் சும்மா இருக்க முடியவில்லை . யூத சமுதாயத்தில் இரண்டாம் தரத்தவராய் கருதப்பட்ட பெண்களில் தானும் ஒருத்தி என்றாலும், தடுக்கும் வீரர்களையும் குறுக்கே நின்ற கூட்டத்தையும் பொருட்படுத்தாது முன்னே சென்று இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார். தடைகளைத் தாண்டும் துணிவு அவரிடம் இருந்தது.

பொலிவிழந்த முகங்களையும் கறைபடிந்த முகங்களையும் நாமும் பார்க்கத்தான் செய்கின்றோம். இயற்கையாகவே நமக்குள் இருக்கும் மனிதம், இரக்கம், அன்பு, தயாளகுணம் அந்த முகங்களின் கறைகளைத் துடைக்க நம்மைத் தூண்டுகிறது. தன் நெற்றிப் பொட்டையும்

கூந்தலின் பூவையும் இழந்த விதவைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுக்க மனம் சம்மதிக்கிறது. ஆனால் பெற்றோரும் சமூகமும் எப்படி அணுகுவார்கள் என்ற நினைவு வந்ததும் நல்லெண்ணம் பட்டுப்போகிறது. வரதட்சணையே வாங்காமல் ஒரு பெண்ணை மணமுடிக்க ஆண்மை அழைக்கிறது. ஆனால் பெற்றோர்களின் நச்சரிப்பு நம்மை தலையாட்டிப் பொம்மைகாளக மாற்றி விடுகிறது. மணமேடையே ஏறாத பல முதிர்கன்னிகளின் வாழ்க்கைக்கு அர்த்தம் தர மனமே இல்லாதவர்கள் அல்ல ஆண்கள். ஆனால் தடைகளை மீறத் தயக்கம் காட்டுகிறார்கள். சமதர்மச் சமுதாயம் அமைக்கும் உயரிய சிந்தனை கொண்டு கலப்புத் திருமணம் செய்யத் தயாராய் இருப்போர் இன்றைக்கும் உண்டு. ஆனால் சமூக வேலிகளை உடைத்தெறிய திராணியில்லாமல் போகிறது. பல பெண்களின் முகங்கள் பொலிவிழந்திருப்பதற்குக் காரணம் ஆண்களில் நல்லவர்கள் இல்லை என்பதல்ல, ஆனால் நல்லெண்ணம் கொண்ட அவர்களுக்குத் துணிவில்லை என்பதுதான். கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்த வெரோணிக்காளின் வீரம் இவர்களுக்கு இருக்குமானால் பலருடைய முகங்கள் பொலிவு பெறும்.

**நினைவில் கொள்வோம்:-**. சாதனைகள் செய்ய நல்லெண்ணம் மட்டும் போதாது. எண்ணியதைச் செய்யும் துணிவும் வேண்டும்.

**செபம்** : இறைவா! பொலிவிழந்த வாழ்க்கைக்கு ஒளியேற்றத் துடிக்கும் நல்லெண்ணத்தோடு, அதைச் செய்யத் தேவையான துணிவையும் தந்தருளும். ஆமென்.

## 7. தண்டனை பெறுவோர் மட்டுமே குற்றவாளிகள் அல்ல !

**கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள்**

(கலா 6:1)

***ஏழாம் நிலை :***

இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார். வீழ்ந்து கிடக்கும் அவரைத் தூக்கிவிட யாரும் முன்வரவில்லை . மாறாக கீழே கிடக்கும் அவரைத் துச்சமாய் மிதித்து ஈனமாய் பார்த்து ஏளனமாய்

பேசி எள்ளி நகையாடினார்கள். ஒன்றை மறந்து விட்டார்கள். வீழ்ந்து கிடந்தவர் குற்றவாளியல்ல. அவரை வீழ்த்திய சிலுவையும் அவருக்கு உரியது அன்று. அது அவர் மீது சுமத்தப்பட்டது.

இன்றைய சமூகச் சூழலில் தள்ளாடி விழுபவர்களும் தடுமாறி வீழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இவர்கள் வீழ்ச்சிக்கு யார் காரணம்? அல்லது எது காரணம்? விபச்சார விடுதியில் தன் உடலுக்கு விலை பேசும் பல பெண்கள் அதை விரும்பிச் செய்வதில்லை. வறுமை அவர்களை விரட்டியதால் வீழ்ந்துக் கிடக்கிறார்கள். பிறக்கும்போதே திருடராய் யாரும் பிறப்பதில்லை. தன் வயிற்றுப் பசியையும் தன்னைச் சார்ந்தோர் பசியையும் தீர்க்க நியாயமான முறையில் முயன்று தோற்றுப் போனவர்களில் பலரே திருடர்கள் ஆகின்றனர். வயிற்றுப் பசிக்காய் திருடிய சிறுவர்கள் பின்பு வாடிக்கையாய் திருடி அதனையே வாழ்க்கையாக மாற்றிக் கொள்கின்றனர். இவர்கள் வேலை தேடிய போது இடமில்லை என்று விரட்டிய சமூகம், இப்போது சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இவர்களுக்கு தஞ்சம் அளிக்கிறது.

குற்றங்களை யாரும் நியாயப்படுத்த முடியாது. ஆனால் குற்றவாளிகள் பிறப்பதில்லை . அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். அவர்களை உருவாக்கியதில் சமூகமாகிய நமக்கும் பங்குண்டு. தண்டிக்கப்படவேண்டியவர்கள் அவர்கள் மட்டுமல்ல. நாமும் தான். நாம் அவர்கள் நிலையில் இருந்திருந்தால் ஒருவேளை அவர்களைவிட மோசமான குற்றங்களைச் செய்திருக்கக் கூடும். அவர்கள் விழுந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெறுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. அவர்களும் மனிதர்களே! அவர்களுக்குத் தேவை அனுசரணை. ஆதரவு. அவர்களைச் சந்திக்க முயன்றோமா? அவர்களின் அவல நிலைக்கு காரணம் அறிய முயற்சித்தோமா? ஆதரவான வார்த்தைகளால் தூக்கிவிட முயன்றோமா? **நினைவில் கொள்வோம்:-.** உள்ளே இருப்பவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் அல்ல. வெளியில் இருக்கும் நாமெல்லாம் நிரபராதிகளும் அல்ல.

**செபம்** :- இறைவா! வாழ்க்கையின் சிக்கல்களால் சறுக்கி விழுந்து விட்ட சிலரைப் பார்க்கும் போது, சிறுமைப்படுத்தாமல் ஆதரவாய் நடந்து - கொள்ள அருள்தாரும். ஆமென்.

# 8.இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே மேல்

## நன்மையால் தீமையை வெல்லுங்கள்

(உரோ12:21)

***எட்டாம் நிலை :***

எருசலேம் மகளிர் இயேசுவைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார்கள். கதறி அழுகிறார்கள். இயேசுவுக்கு நிகழ்ந்தவற்றைப் பார்த்து. அழுகிறார்கள். புலம்புகிறார்கள். புலம்புவதால் என்ன இவர்களுக்குத் தாங்க முடியவில்லை பயன்? தீமையை எதிர்க்காமல் உதிர்க்கும் கண்ணீரால் பயனேதும் இல்லை

. முடியவில்லை இல்லை பயணத்தில் இலேஅவுடன் வாழ்க்கையின் சூழல்களில் நாமும் பலவற்றைக் காண்கின்றோம். சகிக்க முடியாமல் கண்களைத் திருப்பிக் கொள்கிறோம். 'சமூகம் கெட்டுவிட்டது. நியாயாம் செத்துவிட்டது. நேர்மை தொலைந்து விட்டது எனப் புலம்புகிறோம். கனம் நிறைந்த வார்த்தைகளை உதிர்க்கிறோம். நாம் உதிர்க்கும் வார்த்தைகள் உள்ளத்தைச்

. வாழ்க்கையின் சூழல்களில் நாமும் பலவற்றைக் காண்கின்றோம். “சமுகம் கெட்டுவிட்டது. நியாயம் செத்துவிட்டது. நேர்மை தொலைந்து விட்டது” என்று புலம்புகிறோம். கனம் நிறைந்த வார்த்தைகளை சுடுவதில்லை. .எனவே தான் உதட்டளவில் நின்று விடுகிறது. மாற வேண்டியவையும் மாற்றப்பட வேண்டியவையும் இவ்வுலகில் நிறையவே உள்ளன. களைய வேண்டியவையும் கழுவப்பட வேண்டியவையும் சமூகத்தில் நிறையவே உள்ளன. கயமையைக் கண்டு முகம் கசிவதில் மட்டும் என்ன பயன்? அவற்றைக் களைவதற்கு என்ன செய்தோம்? என் ஒருவனால் என்ன செய்ய முடியும்? ஒரு கை அசைந்தால் ஓசை வராது என்றெல்லாம் கூறி

தப்பிக்கப் பார்க்கிறோம். ஒரு கை அசைந்தால் ஓசை வராது, உண்மைதான். ஆனால் ஒரு கையுமே அசையவில்லையென்றாலும் ஓசை வராது. வரவே வராது. எல்லோரும் ஒதுங்கி விட்டால் தீமை ஒதுங்காது. வீதியில் இறங்கி வீறுடன் எதிர்க்க முடியாமல் போகலாம். ஆனால் குறைந்த பட்சம் நாம் பணி செய்யும் இடங்களிலாவது, நாம் சந்திக்கும் சூழல்களிலாவது , கண்ணெதிரே நடக்கும் தவறுகளையாவது தட்டிக் கேட்க துணிவு வேண்டாமா? அதையெல்லாம் விட கொடுமை. இவையெல்லாம் காலத்தின் கட்டாயம்' என நாமே தவறு செய்து விட்டு சமாதானம் சொல்லிக் கொள்கிறோம். காரியம் ஆவதற்குக் கையூட்டு கொடுப்பதும் பிரச்சனைகளிலிருந்து தப்பிக்க பொய்சாட்சி சொல்வதும் வேண்டாம் வம்பு' என்று ஒதுங்கிப் போவதும் புத்திசாலித்தனமாய் கருதப்படுகிறது இப்படியெல்லாம் இருந்து விட்டு சமூகம் கெட்டுவிட்டது' என்று பழிபோடுவது முதலைக் கண்ணீர் வடிப்பதற்குச் சமம். இதைத்தான் எருசலேம் மகளிர் செய்தனர். அதைத் தான் நாமும் செய்கிறோம் **நினைவில் கொள்வோம்**. இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல்.

**செபம்** : இறைவா! இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல், என்பதைப் புரிந்துக் கொண்டு, என்னையும், நான் இருக்கும் இடத்தையுமாவது, இருளற்ற ஒளி படர்ந்த இடமாக மாற்ற துணை புரியும் ஆமென்.

## 9.உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

### 'தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்''

(எபி 12:12)

**ஒன்பதாம் நிலை :**

இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார். விழுகின்ற ஒருவனைத் தடுத்துத் தாங்குவது மனித குணம். அந்த மனித குணமே மக்கிப் போனவர்களாய், மனம் இறுகிப் போனவர்களாய் நிற்கின்றனர் வீரர்களும் மக்களும்.

வாழ்வின் சில உண்மைகளைப் பார்க்கும்போது நம் இதயமும் இறுகிப்போய்விட்டதோ, நம் மனிதமும் மக்கிப் போய்விட்டதோ என்ற ஐயம் எழுகிறது. விழுபவர்கள் பலர் உண்டு. போதையில் விழுபவர்கள், காமத்தில் விழுபவர்கள், மமதையில் விழுபவர்கள்... இப்படி எத்தனையோ பேர். இவர்கள் விழுவதில் சுகம் காண்பவர்கள். இவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை . அனால் தாங்கள் விழுவதை உணரக் கூட முடியாமல் விழுபவர்கள் உண்டு. களைப்பால் விழுபவர்கள், சோர்வால் விழுபவர்கள், நோயால் விழுபவர்கள் அனைத்திலும் கொடுமையாக பசியால் விழுபவர்கள் உண்டு. அதுவும் நம் நாட்டில் நிறையப் பேர் உண்டு. 'தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் எனப் பாடிய புலவன் வாழ்ந்த மண்ணில் தனி ஒருவர் அல்ல... பல கோடி பேர் பட்டினியால், பட்டினிச்சாவால் மடிந்து போகின்றனர். அரசின் தானியக் கிடங்குகளில் உணவுப் பொருட்கள் வீணடிக்கப்படுகின்றனவே தவிர இவர்கள் பசியைப் போக்க அளிக்கப்படுவதில்லை . அரசின் அலட்சியப் போக்கு ஒரு புறம் இருக்கட்டும். நாம் மட்டும் என்ன, இத்தகையோர் மீது அக்கறை கொண்டோமா? பரிவு காட்டினோமா?

அன்றாடம் அன்னதானம் நடத்தி அன்பை வெளிப்படுத்த வேண்டாம். ஆனால் என்றைக்காவது ஒருநாள், ஒரே ஒரு நாளாவது பசித்தோரை உண்பிக்க முடியாதா அல்லது கூடாதா? கோலாகலமாய் கேக் வெட்டி கொண்டாடப்படும் பிறந்த நாளன்று மெழுகு திரிகளை ஊதி அணைக்கும் அதே வேகத்தில் ஒரு ஏழையின் வீட்டில் உலை கொதிக்க நெருப்பேற்ற முடியாதா? லட்சங்கள் செலவழித்து நிகழ்த்தப்படும் திருமணப் பந்தியில் பரிமாறப்படும் பலவகைப் பண்டங்களில் கொஞ்சமாவது பசித்தோரைப் போசிக்க பயன்படக்கூடாதா? எச்சிலை மிச்சத்தை உண்ணும் அந்தப் பரம ஏழைகளை ஒரு நாளாவது மரியாதையாய் அமர்த்தி உணவு தரமுடியாதா? முடியும். ஆனால் இவற்றைப் பற்றி சிந்திக்கவே நாம் துணிவதில்லை. என்றைக்கும் இல்லையென்றாலும், என்றைக்காவது, எல்லோரையும் இல்லையென்றாலும், குறைந்தது ஒருவரையாவது பசியின் தடுமாற்றத்திலிருந்து தூக்கி விடுவோம்.

**நினைவில் கொள்வோம்** உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

**செபம்** : இறைவா! விழுபவர்கள் எல்லோரையும் தூக்கிவிட : முடியவில்லையென்றாலும்,பசிக்கொடுமையால் விழுபவர்களையாவது ஒரு சில நேரங்களிலாவது உண்பித்து தூக்கி விடும் அருள்தாரும். நீ . ஆமென்..

## 10.தலைக்குனிவு தனி நபருக்கல்ல! மனித உணர்விற்கே!

**’இரக்கம் காட்டாதோர்க்கு இரக்கமற்ற தீர்ப்பு கிடைக்கும்**"

(யாக் 2:13)

***பத்தாம் நிலை :***

இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள். அக்கிரமம் அணை கடக்கிறது. அத்து மீறல் எல்லை தாண்டுகிறது. குற்றவாளிகளுக்குக் கூட கொடுக்கக் கூடாத ஒரு அவமானத்தை இறைமகனுக்குத் தருகிறார்கள்.

நிலைமைகள் ஒன்றும் மாறிவிடவில்லை. இன்றும் அத்து மீறல்கள் அன்றாடம் நடக்கத்தான் செய்கின்றன. அரசியல் உலகில் நடக்கும் அத்துமீறல்கள் பளிச்சென்று தெரிகிறது. சமூகத்தில் சாதியக் கொடுமை தலைவிரித்தாடுகிறது. மனநலக் காப்பகங்கள் மிருகச்சாலைகளைவிட மோசமாய் நடத்தப்படுகின்றன. மனித மாண்பு மடிந்து போகிறது. சுயகவுரவம் என்ற ஆடை களையப்பட்டு மனிதம் நிர்வாணமாக்கப் படுகிறது.

சமுதாயத்தின் ஒரு தளத்தில் மட்டுமே இவை நடப்பதாய் நாம் ஏமாந்து போகக்கூடாது. இளைய தலைமுறையும் இந்த துர்க்குணங்களை உள்வாங்கிக்கொண்டது. கல்லூரி வளாகத்திலும், அதைச் சுற்றிய சாலைகளிலும் ரேகிங் என்ற பெயரிலும் ஈவ்டீஸிங் என்ற பெயரிலும் நடக்கும் கொடுமைகள் நாம் அறிந்தவையே. நெருப்பில் துடிக்கும் விட்டில் பூச்சிகளாய் எத்தனை இளம் மாணவ

மாணவிகள்! சிலர் உள்ளத்தால் செத்துப்போகிறார்கள். சிலர் உடல் அளவிலும் செத்துப்போகிறார்கள். விளையாட்டாய் தொடங்கி, விபரீதமாய் தொடர்ந்து, விபத்துகளாய் முடிகிறது இந்தக் கொடுமை. சில நேரங்களில் தற்கொலையாய் தடம் மாறவும் செய்கிறது. வெட்கப்படவேண்டியது யார்? ஏளனம் செய்யப்படுபவர்களா? இல்லையில்லை ஏளனம் செய்பவர்கள். வெதும்பிப் போக வேண்டியது யார்? இழிவாக நடத்தப்படுபவர்களா? இல்லையில்லை . இழிவாக நடத்துபவர்கள்.

இத்தகு கொடுமைகள் பற்றி கேள்வியுறும்போது உறைந்து போகிற இதயம் பின்பு உறங்கிப் போகிறது. சில நிகழ்வுகளின் அதிர்வுகள் உள்ளவரை மனித உரிமை பற்றி பேசப்படுகிறது. பிறகு வசதியாய் மறக்கப்படுகிறது. மறக்கப்படக் கூடிய ஒன்றல்ல மனித மாண்பு. மறுக்கப்படக்கூடியதும் அல்ல. மனித உரிமையும் மனித மாண்பும் மறுக்கப்படுகின்ற போதெல்லாம் உரத்த குரல் கொடுப்போம். நாம் வாழும் இடங்களில் அதை மதித்துக் காப்போம். ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் அதே நேரத்தில் மனித பண்புகளையும் வளர்த்துக் கொள்வோம்.

**நினைவில் கொள்வோம்.** மனித மாண்பு மறுக்கப்படுகிறபோது இழிவுபடுவது சில மனிதர்கள் அல்ல. மனிதம் என்கின்ற மாண்பு.

**செபம்** : இறைவா! உம் சாயலாக நீர் படைத்த மனிதன் மாண்புக்குரியவன் என்பதை உணர்ந்து, எல்லோரையும் எல்லா நேரத்திலும், எல்லாச் சூழலிலும் மாண்புடன் நடத்தும் அருள்தாரும். ஆமென்.

## 11.மனிதன் பிறந்தது சுதந்திரமாய், இருப்பதோ கட்டுண்டவனாய்

"**தளர்ந்து போன கைகளைத் திடப்படுத்துங்கள்''**

(எபி 12:12)

**பதினொன்றாம் நிலை :**

இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள். சிகரம் ஏற்றப்பட வேண்டியவர், சிலுவை ஏற்றப்படுகிறார். மேடைக்கு அழைத்துச்

செல்லப்பட வேண்டியவர் மரணத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார். உலகம் மதிக்கும் பணபலம், அதிகார பலம் இல்லாததால் இயேசுவை எந்த எதிர்ப்பும் இன்றி சிலுவையில் அறைகிறார்கள்.

இன்றைக்கும் சிலுவைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதில் அப்பாவிகள் பலர் அநியாயமாய் தொங்குகின்றனர். வறுமையின் காரணமாய் என்றோ வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அந்தக் கடனுக்கான வட்டியைச் செலுத்தவே, தங்கள் உழைப்பையும்

வியர்வையையும் இரத்தத்தையும் நிரந்தரமாக தந்து கொண்டிருக்கும் கொத்தடிமைகள், பணபலத்தால் சிலுவையில் அறையப்படுகிறார்கள்.

அரசியல்வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினரின் அநீதமான உத்தரவுகளுக்குப் பணிய மறுப்பதாலும், அவற்றை எதிர்ப்பதாலும் தண்ணியில்லா காட்டுக்கு மாற்றப்பட்டும், எந்த இடத்திலும் நிலையாக குடிபெயர முடியாதவாறு அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டும், பழிவாங்கப்பட்டும் ஊழியர்கள் அதிகார பலத்தால் சிலுவையில் அறையப்படுகிறார்கள்.

சிறுபான்மையோராய் இருப்பதால் பெரும்பான்மையோரின் வற்புறுத்தலுக்கும் வன்முறைக்கும் ஆளாக நேரிடுகிறது. பெருங்குடி மக்கள் வாழும் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் சொல்லொண்ணா துயரத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாக வேண்டியுள்ளது. இவர்கள் ஆள்பலத்தால் சிலுவையில் அறையப்படுகிறார்கள்.

இப்படி பணபலம், அதிகாரபலம், ஆள்பலம் என்ற மூன்று ஆணிகளால் அப்பாவிகள் சிலுவையில் அறையப்படும் கொடுமை சமுதாயத்தில் நிகழ்கிறபோது அதை வேடிக்கைப் பார்க்கும் சாமானியர்களாய் இருப்பது கோழைத்தனம். இவற்றை எதிர்க்கத் தவறுவதும் ஒத்துழைப்பதற்குச் சமம்தான். மேலும் இவை ஏதோ சமுதாயம் என்ற பெரிய வட்டத்தில் மட்டுமே நடக்கும் கொடுமையல்ல. குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள்ளும் நிகழத்தான் செய்கிறது. சம்பாதிக்கிறோம் என்பதால் பணபலமும், ஆண் அல்லது பெரியோர் என்பதால் அதிகார = பலமும், மாப்பிள்ளை வீட்டார், கூட்டுக்குடும்பம் என்பதால் ஆள்பலமும் பெற்று குடும்பத்திலேயே மற்றவர்களை

மதிக்காது சிலுவையில் அறைகிறோம். சமூகத்திலும் சரி, குடும்பத்திலும் சரி, சமநிலை தராது, சிலரைக் கட்டுப்படுத்தி வைப்பதில் என்ன வீரம் இருக்கிறது? கட்டி - வைத்து அடிப்பது வீரனுக்கு அழகல்லவே!

**நினைவில் கொள்வோம்**. - மனிதன் பிறந்தது சுதந்திரமாக இருப்பதோ கட்டுண்டவனாக.

**செபம்** : இறைவா! பிறரின் சுதந்திரத்தை மதிக்காது, அவர்களை = அறைந்து, கட்டுப்படுத்தும் கயமையைக் களைந்து, அனைவரின் உரிமையையும் மதித்துப் பேணும் நல்ல மனதைத் தாரும். ஆமென்.

## 12.திருச்சபையின்வித்து வேதசாட்சிகளின் இரத்தம்

### ''என் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ''

(மத்5:11),

***பன்னிரெண்டாம் நிலை :***

இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார். கடந்த காலத்தின் நிகழ்வுகள் அவர் கண்முன்னே வருகின்றன. சிலுவைச் சாவுக்கான காரணத்தை அந்த நிகழ்வுகளில் அவரால் காண முடியவில்லை. காரணமின்றி தன்னைக் கொன்றவர்களைக் கண்ணோக்குகிறார். கோபம் வரவில்லை. கருணை பெருக்கெடுக்கிறது. தந்தையே! இவர்களை மன்னியும் என மன்றாடி மடிகிறார்.

இன்றைய நாட்களில் காரணமின்றிக் கொல்லப்படும் கிறிஸ்துக்களின் எண்ணிக்கையும் தாக்கப்படும் கிறிஸ்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இயேசு ஒரு சாதாரண யூதனாகவோ, ஒரு பரிசேயனாகவோ அல்லது ஒரு சதுசேயனாகவோ இருந்திருந்தால் கொல்லப்பட்டிருக்க மாட்டார். அவர் சாவுக்குக் கையளிக்கப்பட்டதன் காரணம் அவர் கிறிஸ்துவாக இருந்ததுதான். இன்றைக்கும் கிறிஸ்துவின் சாயல்களாக இருப்பதனால், கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக இருக்கிற ஒரே காரணத்தினால் தாக்கப்படுகிறோம். கொல்லப்படுகிறோம்.

நிர்வாணமாக்கப்பட்டு தாக்கப்பட்ட குருக்களாகட்டும், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட கன்னியராகட்டும், உயிரோடு எரிக்கப்பட்ட போதகராகட்டும் அவரது பச்சிளம் குழந்தைகளாகட்டும், இன்னும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வரும் எண்ணிறந்த கிறிஸ்தவர்கள் ஆகட்டும், இவர்கள் செய்த குற்றம் என்ன? பள்ளிகள் நடத்தி பாடம் பயிற்றுவித்ததா? மருத்துவமனை நடத்தி ஆரோக்கியம் காத்ததா? சமமாய்ப் பழகி விழிப்புணர்வு ஊட்டியதா? அல்லது தொழுநோயாளருடன் தோழமையாய் இருந்ததா? எது குற்றம்? எதுவுமே குற்றமில்லை. ஒன்றைத் தவிர. கிறிஸ்துவை ஏற்று வணங்கி போதித்து வந்ததுதான் குற்றம். சமுதாயத் தீமைகளைச் சாதாரணர்களாய் பார்த்து திருச்சபையின் வித்து வேதசாட்சிகளின் இரத்தம் பேசாமல் இருந்தால் நாம் சுதேசிகள். அவற்றைக் களைய இயேசுவின் பெயரால் முற்பட்டால் நாம் விதேசிகள், தாக்குதலுக்கு உரியவர்கள். உடலையும், உணர்வையும், அறிவையும் சீர்படுத்தி ஆன்மாவையும் - ஈடேற்ற முயல்வதற்கு கட்டாய மதமாற்றம் என்ற சாயம் பூசி சாபமிடுகின்றனர். மாற்றங்கள் நிகழ்வது அவர்களுக்கு ஆபத்தானது. கடைநிலையில் இருப்போர் முன்னேறிவிட்டால் தாங்கள் முன்னிலை வகிப்பது தொடர முடியாது என்ற பயம். எனவே தாக்குகின்றனர்.

இவர்கள் மீது நாம் கோபம் கொள்ளமாட்டோம். 'தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் செய்வதறியாது செய்கிறார்கள்' என இயேசுவோடு ஜெபிப்போம். கிறிஸ்து பாடுபட்டார், கிறிஸ்தவம் பிறந்தது. நாமும் பாடுபடுவோம், கிறிஸ்தவம் தழைக்கும்.

**நினைவில் கொள்வோம்**. திருச்சபையின் வித்து வேதசாட்சிகளின் இரத்தம்.

**செபம்** : இறைவா! உடலைக் கொல்ல முயல்பவர்களுக்கு அஞ்சாமல் ஆன்மாவைக் கொல்ல முயல்வோருக்கு மட்டுமே அஞ்சவும், இறுதிவரை கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்து மரிக்கவும் அருள்தாரும். ஆமென்.

# 13.தறிக்கப்படாத கிளைகள் தணலில் இடப்படும்

## ’’கனிகளைக் கொண்டே மரத்தை அறிவர்.

(மத் 7:20)

**பதின்மூன்றாம் நிலை :**

இயேசுவின் மரித்த உடலை அன்னை மரியாளின் மடியில் கிடத்துகிறார்கள். பச்சிளம் பாலகனாய் அவள் பாருக்குக் கொடுத்த பரமனை, பாதகமாய் நடத்தி, பாடுகளுக்கு உட்படுத்தி, படுகொலை செய்து அவள் மடியில் கிடத்துகிறார்கள். வாலிபத்தில் தன் வாழ்க்கையைத் துறந்த ஒரு மகனாக இயேசுவைத் தன் மடியில் தாங்குகிறாள் மரியாள்.

இயேசுவோ வாலிபத்தில் தன் வாழ்க்கையை தியாகம் செய்தவர். எனவே மரியாள் கலங்கினாலும் தலை குனியவில்லை . இன்றோ வாலிபத்தில் தங்கள் வாழ்வைத் தொலைக்கின்றனர், பல வாலிபர்கள் தங்கள் பெற்றோருக்குத் தீராத கவலையையும் தாங்கமுடியாத பழியையும் சுமத்துகின்றனர். வாழ வேண்டிய இவர்களின் வாழ்க்கை பறிபோனது எப்படி? எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அந்தக் குழந்தை தாயின் மடியைக் கடந்து தானாக நடந்து விரைவாய் வளர்ந்து சமுதாய அரங்குக்குள் நுழையும் போதுதான் அதன் குணம் மெருகேறுகிறது. அல்லது உருக்குலைகிறது.

உல்லாசம் என்ற பெயரில், நண்பர்கள் சுற்றத்தில், கற்றிராத பழக்கங்கள் அவர்களைத் தொற்றுகிறது. போதை மற்றும் மயக்கப் பொருட்கள் அவர்கள் மதியையும் மனதையும் உடலையும் மெல்ல மெல்ல. மங்கச் செய்கிறது. வெள்ளித் திரையில் வேடம் போடுபவர்களுக்கு இவர்கள் விசிறிகள் ஆகின்றனர். ரசிகர் மன்றங்கள் அமைத்து அதில் பொழுதைக் கழித்து பொன்னான நேரத்தை விரயம் செய்கின்றனர். மயக்க வார்த்தைகள் பேசும் அரசியல்வாதிகளின் மந்திரச் சொற்களில் தங்களையே இழந்து தங்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிடுகிறார்கள். மொழி, இனம், மதம் என்ற பற்றுக்குரிய விஷயங்களை இவர்கள் மனதில் சில விஷமிகள் வெறியாய் ஊட்ட வன்முறைக்கும் தீவிரவாதத்திற்கும் இவர்கள் பயிற்றுவிக்கப்

படுகின்றனர். இறுதியில் காலத்தைத் தொலைத்து காயங்கள் பட்டு தழும்புகளோடும் வடுக்களோடும் வாழ்க்கையைத் துறந்து நிற்கின்றனர்.

சமுதாயத்தில் விரவிக்கிடக்கும் விஷமம் இவர்களது விரயமான வாழ்வுக்கு காரணம் என்றாலும் வீட்டில் தரப்படாத கவ 'மம், தயாரிப்பும், வளர்ப்பும் நிச்சயம் மூல காரணமாகும். மரியாளின் வளர்ப்பால் இயேசு மீட்பரானார். நமது வளர்ப்பு உருவாக்குவது மீட்பர்களையா? மூர்க்கர்களையா? வளரும் பருவத்தில் திருத்தப்படாத குழந்தைகள் வளர்ந்த பின்னர் திருந்த முடியாத நிலையை அடைந்த விடுவர். அவர்கள் அழிவைக் கண்டு கண்ணீர் விட முடியுமே தவிர அதனைத் தவிர்க்க முடியாது.

**நினைவில் கொள்வோம்.** தறிக்கப்படாத கிளைகள் தணலில் இடப்படும்.

**செபம்** : இறைவா! தறிக்கப்படாத கிளைகள் தணலில் இடப்படும் என்பதை உணர்ந்து, எங்களிலும் எங்கள் பிள்ளைகளிலும் தறிக்கப்பட வேண்டிய குணங்களைத் தறிக்கவும், நன்முறையில் வளர்க்கவும் அருள்தாரும். ஆமென்.

## 14.பாதுகாப்பில் அல்ல பகிர்வதில்தான் இன்பம்

**.'அமைதி ஏற்படுத்துவோர் ... கடவுளின் மக்கள் எனப்படுவர்'**

(மத் 5:9)

**பதினான்காம் நிலை :**

இயேசுவின் உடலை அடக்கம் செய்கிறார்கள். கடவுளுக்குக் கல்லறையா? கற்பனை கூட செய்ய முடியவில்லை. ஆனால் அது அனுமதிக்கப்படுகிறது. பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நம்மைப் போல் ஒருவரான இயேசு தெய்வமே சந்தித்த கல்லறையை நாமும் ஒருநாள் சந்தித்தே தீரவேண்டும்.

கல்லறை என்ற சொல்லே, அதைப்பற்றிய சிந்தனையே நம்மை கதிகலங்கச் செய்கிறது. ஆனால் கல்லறைக்குச் செல்லும் நாளை

யாராலும் தவிர்க்க முடியாது. மருத்துவத்தால் மனிதன் மரணத்தைத் - தள்ளிப்போட முயன்றாலும் மரணத்தின் பிடி மனித குலத்தின் மீது இறுகிக்கொண்டே இருக்கிறது. வாயில் நுழையா பெயர்கள் சூட்டப்படும் உயிர்க்கொல்லி நோய்கள் புதிது புதிதாய் தோன்றி பரவி பீதியூட்டுகின்றன. இயற்கைச் சீற்றங்களுக்கு இறையாகிப்போகும் மனிதரின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது.

பாதுகாவின் சிகரமாய் கருதப்படும் வல்லரசின் விண்ணை முட்டும் கட்டிடங்கள் கூட விநாடியில் தரைமட்டமானதையும் அதில் பல உயிர்கள் பலியானதையும் சரித்திரம் பதிவாக்கிவிட்டது. இத்தகு சூழலில் பாதுகாப்புக்கென நாடுகள் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்கின்றன. பாதுகாப்புக்காகச் செலவிடப்படும் பணம் மக்கள் நலனுக்காய் செலவிடப்பட்டால் உலகின் முகமே மாறிவிடும். வறுமையும், பசியும், பிணியும் அறவே ஒழித்துக்கட்டப்பட்டுவிடும். ஆனால் முடிவதில்லை . காரணம் அன்புக்குப் பதில் அச்சம் அனைவரையும் ஆட்கொண்டுவிட்டது. வல்லரசுகள் ஆவதில் கவனம் செலுத்தும் நாடுகள் நல்லரசுகள் ஆவதில் கவனம் செலுத்துவதில்லை. உலகளவில் இவை நிகழ்ந்தாலும் தனிமனித வாழ்விலும் இவற்றின் தாக்கம் தென்படத்தான் செய்கிறது. வல்லரசாக எத்தனிக்கும் நாடுகள் போலவே செல்வந்தன் ஆகவேண்டும், பலசாலி ஆக வேண்டும், வல்லவனாக வேண்டும் என மனிதன் நினைக்கிறானேயன்றி நல்லவனாக இருப்பதில் அர்த்தம் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அச்சத்தால் உந்தப்பட்டு தன் வாழ்வின் பாதுகாப்புக்காக பணம் சேர்க்கும் மனிதன் அன்பால் உந்தப்பட்டு பகிரத் தொடங்கினால் தானும் வாழ்வான். பிறரையும் வாழவைப்பான். வாழ்ந்தவர்களைக் காட்டிலும் வாழவைத்தவர்களே இன்றும் நிலைப்புகழ் பெற்றுள்ளனர்.

**நினைவில் கொள்வோம்**. வாழ்வின் அர்த்தம் பாதுகாப்பில் அல்ல பகிர்வதில்தான் அடங்கியுள்ளது.

**செபம்** : இறைவா! வாழ்க்கையின் அர்த்தம் பாதுகாப்பில் அல்ல பகிர்வதில்தான் என்பதைப் புரிந்து கொண்டு, பகிர்ந்து வாழவும் பிறரை வாழவைக்கவும் அருள்தாரும். ஆமென்.

## சிலுவைகள் இல்லா சமூகம் சமைப்போம்.

இயேசுவின் திருப்பாடுகளின் பயணத்தை ஒரு சமூகமாக பின்தொடர்ந்த நாம் சற்று சோர்ந்துபோயிருக்கலாம். சமூகத்தில் இத்தனை கொடுமைகளா? இத்தனை கயமைகளா? இத்தனை களங்கங்களாவென்று ! நம் சலிப்பில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சமூகம் என்பது நம்மைக் கடந்த ஒன்றல்ல. நம்மையும் உள்ளடக்கிய ஒன்றுதான் என்பதைப் புரிந்து கொள்வோம். இயேசு என்ற தனி நபரின் வாழ்வும், பாடுகளும், மரணமும், உயிர்ப்பும், பாழ்பட்டுக்கிடந்த மனித இனத்திற்கே மீட்பைத் தந்தது. புதிய யுகத்திற்கான பூபாளம் பாடியது. தனிமனிதர்கள் தொடங்கிய போராட்டங்கள்தான் புரட்சிகளாய் மாறி சரித்திரத்தைத் திருப்பியது. திருத்தியது. நீங்களும் நானும் நினைத்தால் மாற்றலாம், முழு உலகத்தை இல்லையென்றாலும் நம் சிறு சமூகத்தையாவது. இன்றைக்கே இல்லையென்றாலும், என்றைக்காவது ஒரு நாள் நிச்சயமாக மாற்றலாம். மாற வேண்டிய சமுதாயத்தில் மாற்றப்படவேண்டிய முதல் நபர் நான்தான் என்ற உணர்வோடு நம்மையே மாற்றுவோம். பிறரையும் மாற்ற முயலுவோம். தனியாக அல்ல இயேசுவோடு. 'மனம் மாறுங்கள். இறையரசு நெருங்கிவிட்டது' என்று அறைகூவலிடும் இயேசுவின் குரல் கேட்கிறது. அது சமூக மாற்றத்திற்கான போர் முரசு. முரசு கொட்டிவிட்டது புறப்படுவோம். இயேசுவோடு போர் புரிவோம். வெற்றி நமதே. -